இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊழியர்களுக்கான சீருடை மற்றும் சீருடைத் துணிகளுக்கான பெறுகை

## கேள்வி இல : PR/02/11-02-(2026)

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊழியர்களுக்கு சீருடைகள் மற்றும் சீருடைத் துணிகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் கீழ் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

விலைமனு ஆவணங்களில் தேவைப்பாட்டின் முழுமையான விபரங்கள் மற்றும் துணிகளின் விபரக் குறிப்புகள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

| | உருப்படி விபரம் | தேவையான அளவு |
|---|---|---|
| 1. | காற்சட்டை துணி (மூன்று ஊழியர் வகுதிகள்) | 997.5 மீற்றர்கள் |
| 2. | சேர்ட் - நீண்ட கை (இரண்டு ஊழியர் வகுதிகள்) | 798 எண்ணிக்கைகள் |
| 3. | சேர்ட் - அரைக்கை (ஒரு ஊழியர் வகுதி) | 399 எண்ணிக்கைகள் |
| 4. | ரவிக்கை துணி சகிதமான சாரிகள் (மூன்று ஊழியர் வகுதிகள்) | 1527 எண்ணிக்கைகள் |

**வேலையின் நோக்கம்**

விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் அட்டவணை மற்றும் விவரக்குறிப்புகளின் படி சீருடை துணிகள் மற்றும் அணியத் தயாராக உள்ள சீருடைகளை வழங்குதல்.

01. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் பிரகாரம் விலைக்கோரல்கள் இடம்பெறும்.

02. சித்திகரமான விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் 75 நாட்களுக்குள் பெறுகையை நிறைவு செய்ய வேண்டும்.

03. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் தொண்ணூற்றியொரு (91) நாட்காட்டி நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.

04. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக பின்வரும் குறைந்தபட்ச தகுதித் தேவைப்பாடுகளை விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் கொண்டிருக்க வேண்டும்.

மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

(அ) விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் 6 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவிருக்க வேண்டும். விலைமனுதாரர் எந்தவொரு அரசாங்க அமைப்பினாலும் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருக்க வேண்டும். (உள்நாட்டில் அல்லது சர்வதேச அளவில்)

(ஆ) விலைமனுதாரர்/விலைமனுதாரர்கள் கடந்த 10 வருடங்களில் (2016-2025) இதனையொத்த குறைந்தபட்சம் 2 திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்தும் / செயற்படுத்திய அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும். இந்த வகையான ஒரு திட்டத்தின் குறைந்தபட்ச பெறுமதி 5 மில்லியன் இலங்கை ரூபாவிற்குக் குறையாமல் இருக்க வேண்டும். (சான்றுகளை விலைமனு ஆவணத்துடன் வழங்க வேண்டும்)

(இ) விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் கடந்த மூன்று வருடங்களில் குறைந்தபட்ச சராசரி வருடாந்த புரள்வாக ஐம்பது மில்லியன் (50 மில்லியன் இல. ரூபா) இலங்கை ரூபாவைக் கொண்டிருக்க வேண்டும். (சான்றுகளை விலைமனு ஆவணத்துடன் வழங்க வேண்டும்)

05. தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 2026-02-02ஆம் திகதி முதல் 2026-02-20ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 2ஆம் மாடி, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், பெறுகை முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுதாரர்கள் மேற்கூறிய முகவரியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவில் 2026-02-02ஆம் திகதி முதல் 2026-02-20ஆம் திகதி வரையான வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். தொலைபேசி: 011 2887585 மின்னஞ்சல்: mgr_procurement@slbfe.lk

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத பத்தாயிரம் இலங்கை ரூபாவைச் (10,000.00 இல. ரூபா) செலுத்தி 2026-02-02ஆம் திகதி முதல் 2026-02-20ஆம் திகதி மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான வேலை நாட்களில் பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 2ஆம் மாடி, பெறுகைப் பிரிவு, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவருக்கு நிறுவனக் கடிதத் தலைப்பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாக மட்டுமேயாகும்.

விலைமனுதாரர் / விலைமனுதாரர்கள் தமது வேண்டுகோள் சகிதம் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் (BRC) மூலப் பிரதியுடன் நகல் பிரதியொன்றை விலைமனுவுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். வியாபாரப் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி உறுதிசெய்துகொண்டதன் பின் அதே நாளில் மீளளிக்கப்படும்.

07. விலைமனுக்கள் 2026-02-23ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

08. சகல விலைமனுக்களுடனும் மூன்று இலட்சம் இலங்கை ரூபா (300,000.00 இல. ரூபா) பெறுமதியான விலைக்கோரல் பிணை முறி இருக்க வேண்டும் என்பதுடன் அது 119 நாட்கள் வரையில் (2026-02-23 - 2026-06-22) செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் விலைமனுவுடன் இணைக்கப்படல் வேண்டும்.

09. விலைக்கோரல் பிணை முறி மற்றும் செயலாற்றுகை உத்தரவாதம் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவருக்கு செலுத்தக் கூடியதான நிபந்தனையற்ற மற்றும் மாற்றமுடியாத கோரிக்கை உத்தரவாதமாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதாகவிருக்க வேண்டும்.

10. 2026-02-09ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு சிறிய மாநாட்டு அறையில் இடம்பெறவுள்ள விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்திற்கு விலைமனுதாரர்கள் அழைக்கப்படுகின்றனர்.

எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு விலைமனுவையும் நிராகரிப்பதற்கான உரிமையை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார் என்பதுடன் எந்தவொரு விலைமனு ஆவணத்தின் தயாரித்தல் அல்லது சமர்ப்பித்தலில் நேரடியாக அல்லது மறைமுகமாக ஏற்படும் எந்தவொரு செலவினத்திற்கும் அவர் பொறுப்பேற்கமாட்டார்.

**தலைவர்**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்த, பத்தரமுல்ல.**

**தொலைபேசி : 011 2887550 / 011 2880564 / 2887585**
**மின்னஞ்சல் : mgr_procurement@slbfe.lk**

**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்பு.**